# புலிகள் தடைவிவகாரம்; தமிழகம் வரும் மத்திய அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி காட்ட முடிவு!

[சென்னை]

விடுதலைப் புலிகள் இயக்... த இந்திய மத்திய அரசு தடைசெய்ததைக் கண்டிக்கும் வகையில் தமிழகம்வரும் மத்திய அமைச்சர்களுக்கு இ... மாதம் முழுவதும் கறுப்புக்

[4-ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 31 இதழ் 123

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 13 — 06 — 1992

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

பலாலி இராணுவ முகாமிலிருந்து படையினர் நேற்றுக்காலை 8-30 மணியளவில் தெல்லிப்பழை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படு

(4-ம் பக்கம் பார்க்க)

## பன்னாலை, இளவாலையில் ஆறு பேர் காயம்

(யாழ்ப்பாணம்]

பன்னாலை, இளவாலை, பண்டத்தரிப்பு பகுதிகள் மீது ஸ்ரீலங்காப்படையினர் நேற்று மேற்கொண்ட துப்பாக்கி ம...

[4-ம் பக்கம் பார்க்க]

# ஸ்ரீலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதுகேள்விக்குறியே

## இந்திய வானொலி கணிப்பு

(சென்னை)

**இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடந்த 5 வருடங்களின் பின்பு மிகப்பெரிய இராணுவ மோதல்கள் தற்போது நடைபெற ஆரம்பித்துள்ளன,**

**இந்தப் பாரிய மோதலில் விடுதலைப்புலிகளை இலங்கை இராணுவம் வெற்றிகண்டு யாழ்நகரை கைப்பற்றுமா என்பது ஒரு கேள்விக்குறியே!**

இவ்வாறு இந்திய வானொலி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: யில் நேற்றுக்காலை ஒலிபரப் பப்பட்ட ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டது அககண்ணோட்டத்தில் இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு தடை விதிக்கப் பட்டதினால் புலிகளுக்கான வெளியிட ஆயுத விநியோகத்தில் பெரும் தட்டுப் பாடுஏற்பட்டுள்ளது என்ற ஒரே நோக்கில்தான் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணத்தை

[4-ம் பக்கம் பார்க்க]

## வீரச்சாவு

[யாழ்ப்பாணம]

வலிகாமம் பகுதியில் நடைபெற்ற மோதலில் காயமடைந்த விடுதலைப் புலிப் போராளிகள் இருவர் நேற்று வரச்சாவைத் தழுவிக்

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த சினித்தம்பி கருணாகரன் என்பவரை. மட்டக்

[4-ம் பக்சம் பார்க்க]

## நயினாதீவில் வர்த்தகரிடம் 8 லட்சம் ரூபா கொள்ளை

(புங்குடுதீவு)

நயினாதீவில் வர்த்தகர்கள் சிலரிடமிருந்து சுமார் எட்டு லட்ச ரூபா பணம் சூறையாடப்பட்டதுடன் அவ்வர்த்

[4ம் பக்கம் பார்க்க]

## யாழ். ஆஸ்பத்திரியில் மின்விநியோகம் குறைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் டீசலுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் மின்சார விநியோகம் அங்கு பெரிதும் குறைக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் தினமும் ஏழு மணித்தியாலங்கள் இயங்கி வந்த இரு ஜெனரேட்டர்களும் தற்போது மூன்று மணித்தியாலங்களுக்கு மாத்திரமே இயக்கப்படுகின்றது. (வி)

## தாக்குதல் அடுத்த சில வாரங்களுக்கும் தொடரும்

(லண்டன்)

யாழ். குடா நாட்டில் விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும்கடந்த சிலநாட்களாக நடைபெற்று வரும் கடும்மோதலில் விடுதலை புலிகள் நேருக்குநேர் நின்று கடுமையாக போரிட்டதாக பி. பி ஸி நேற்று தெரிவித்தது.

பி. பி. ஸி. மேலும் தெரிவிக்கையில்: படையினர் விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து ...டும் எதிர்ப்பை சந்திக்க நேரிட்டது மூன்றுமாத ஓய்விற்குப்பின்னர் இத்தாக்குதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அடுத்துவரும் வாரங்களிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்

(4-ம் பக்கம் பார்க்க)

## 22 படையினர் பலி

### அரசு ஊர்ஜிதம்

(கொழும்பு,

விடுதலைப்புலிகளுக்கும்அரசதுருப்புகளுக்குமிடையில் நேற்று முன்தினம் தெல்லிப்பளைப் பகுதியில் நடைபெற்ற உக்கிர மோதலில் 22 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று கொழும்பில் தெரிவித்தன. (க)

## பேச்சுவார்த்தை; தெரிவுக்குழுவின் பொறுப்பு

(கொழும்பு)

''விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை தெரிவுக்குழுவைப் பொறுத்த விடயமே'' என அமைச்சர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு தீர்வுகாணும் முயற்சியை தற்போது தெரிவுக்குழுவே மேற்கொண்டு வருகிறது.

புலிகளுடனான பேச்சும் தெரிவுக்குழுவுக்குட்பட்ட விடயமே என்றும் திரு. ரணில் தெரிவித்தார். (சி)

## நோக்கம் நிறைவேறியதும் தாக்குதல் முடிவுறும்

(கொழும்பு]

யாழ். குடாவில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கையின் நோக்கம் நிறைவேறியதும் அது முடிவுக்கு வருமென கேர்ணல் சரத்முனசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ் குடாவில் முடிந்தவரை

(4ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு முன் யோசனைகளை சமர்ப்பிக்குமாறு புலிகளுக்கு அரசு அழைப்பு

[கொழும்பு]

நாடாளுமன்ற தெரிவுக்குழு முன் தங்கள் யோசனைகளை சமர்ப்பிக்குமாறு விடுதலைப் புலிகளுக்கு அரசு அழைப்பு விடுத்துள்ளதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியுள்ளார்.

சுதந்திரக்கட்சி தெரிவுக்குழு பகிஷ்கரிப்பை கைவிட்டுள்ளதையடுத்தே தங்கள் யோசனையை சமர்ப்பிக்குமாறு புலிகளை கேட்கும் முடிவு மேற்கொள்ளப்பட்டதாக பிரதி பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழு முன் புலிகள் தங்கள் யோசனைகளை சமர்ப்பித்து தெரிவுக்

(4ம் பக்கம் பார்க்க)

## சமாதானத் தீர்வுக்கு புலிகள் இணங்கவேண்டுமாம்

[கொழும்பு]

சமாதானத் தீர்வுக்கு விடுதலைப்புலிகள் இணங்காத பட்சத்தில் பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென பதில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

பிரச்னைக்கு சமாதானமானமுறையில் தீர்வுகாணவே அரசு விரும்புவதாகவும் அதற்கு புலிகளும் இணங்க வேண்டுமெனவும் அவர் கூறினார்.

அண்மைக்காலமாகசமாதான

[4ம் பக்கம் பார்க்க]

## அரசு புலிகளுடன் நேரடியாக பேசாது

[கொழும்பு]

இனப்பிரச்னைதீர்வு தொடர்பாக அரசு புலிகளுடன் நேரடிப் பேச்சுக்கள் எதனையும் மேற்கொள்ளாது என ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

தெரிவுககுழுவிற்கு புறம்பாக இந்த விடயத்தில் அரசு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது என்றும் அவர் கூறினார். பெரும்பாலும் தெரிவுக்குழு இம்மாதம் 20-ந் திகதியளவில் மீண்டும் கூடுமெனவும் திரு. வீரக்கோன் நம்பிக்கை தெரிவித்தார். [சி]

## வரி விளம்பரம்


### சோபிதா

பாடசாலை உபகரணங்கள் அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். 'சோபிதா' 363 கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (ஏ 2207)

### நூல்கள்

அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்', கஸ்தூரியின் ஆக்கங்கள்' (கவிதைகள், சிறுகதைகள்) ஆகிய நூல்கள் விற்பனையாகின்றன. பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். (சி 5414)

### சுவையகம்

பேக்கரிகளில் தயாரிக்கப்படும் உணவு வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள் ''சுவையகம்'' பிரதான வீதி, (யூனியன் பெற்றோல் நிலைய அருகாமை) சாவகச்சேரி. (ஏ 2216)


# மக்கள் தஞ்சமடையுமிடங்களை குண்டுவீசி அழியாதீர் ஜனாதிபதிக்கு மகஜர்

[யாழ்ப்பாணம்)

மக்கள் மனம்பதைபதைத்து தஞ்சமெனச் சென்றடைகின்ற, தேவாலயம், (சகல மத ஆலயங்கள்), வித்தியாலயம் மடாலயம் (ஆதீனங்கள்', அகதிகள் முகாம், மக்கள் செறிந்துவாழும் வீடுகள் என்பனவற்றில் விமானத் தாக்குதல்கள் நடப்பது மிகவும் பாபகரமான செயலாகும் என்பது அருள் செறிந்த ஆன்றோர்களின் வாக்காகும்.

சமயநெறிகளை நன்கறிந்து வரும் இறை நம்பிக்கை கொண்டவருமான மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள், பேரருளாளர்களின் அருள் வாக்கைச் சிந்தித்து இனி மேலாவது இப்படியான சம்பவங்கள் தேவாலயம், மடாலயம், அகதிமுகாம் வீடுகள் என்பவற்றில் இடம்பெறுமல் இருக்க உடனடியாக நடவடிக்கையை மேற்கொள்வதாக, என அகில இலங்கைத் திருமுறைமன்றம், சைவ சமய நாயன்மார்களாகிய நால்வர் பெருமான்களின் திருவடிகளை சிந்தித்து வந்தித்து வாழ்த்தித். தொழுது ஏத்திப்பணிந்து மிகவும் பணிவுடன வேண்டிக்கொள்கின்றது.

அதியுன்னதமான புனிதத் தலமாக திகழ்கின்ற ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தான தானத்தின் மீதும் விமானத்தாக்குதல் நடாத்தப்பட்டது மிக மிக வேதனைக்கும் ஆற்றொணாத்துயருக்கும் உரிய தொன்று.

இவற்றைத் தங்கள் கவனத்தில் தொண்டு, இனிமேலாவது இப்படியான சம்பவங் ஆலயங்கள், வித்தியாலயங்கள் அகதிகள் முகாம்கள், மக்கள் செறிந்துவாழும் வீடுகள், என்பவற்றில் இடம் பெறுது இருக்க ஆவன செய்வீர்களாக என எமது மன்றம் தங்களை மீண்டும் பணிவுடன் வேண்டுகின்றது.

## சபாநாயகர்கள் மாநாடு

(கொழும்பு)

'சார்க்' நாடுகளின் நாடாளுமன்ற சபாநாயகர்களின் மாநாடு எதிர்வரும் 15ம், 16ம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது

இலங்கை. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு, பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளின் சபாநாயகர்கள் இலங்கைநாடாளுமன்றத்தில் கூடவுள்ள இம்மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர். (கே)

## 2ம் கட்ட அபாயப்படி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் 2-ம் கட்ட அபாயப்படி கொடுப்பனவு முதல் தடவையாக வழங்கப்பட்டுள்ளது

அத்துடன் அரசாங்கத்தால் அண்மையில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை முன்னிட்டு மேலதிகமாக வழங்கப்பட்ட நூறு ரூபாவும் நிலுவைத்தொகையுடன் 200க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (வி)

## ஊழியர் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுச் சங்கத்தில் 1-1-88க்குப் பின்பு கடமை புரிந்த ஊழியர்களுக்கு வாழ்க்கைப்படியாக வழங்கிவந்த 314/- ரூபாவை சில சங்கங்கள் மீள அறவீடு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

கூட்டுறவு ஊழியர் சங்கம் இது பற்றி வடகிழக்கு மாகாண சபைக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளதோடு இந்த ஊழியர்களுக்கு தொடர்ந்தும் வாழ்க்கைப் படியை வழங்குமாறு கேட்டுள்ளது.

## சைக்கிள் திருட்டு

(நாவற்குழி)

வீதியில் ஏற்பட்ட உழவு இயந்திரங்களின் விபத்தைப் பார்ப்பதற்காக சைக்கிளை ஓரத்தில் நிறுத்திவிட்டு வேடிக்கைபார்த்தவரது துவிச்சக்கரவண்டி காணமல் போய்விட்டது.

மீசாலையைச் சேர்ந்த க. சிவானந்தம் என்பவரது 3,500 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டியே இவ்வாறு காணமல போனது (107)

# அமைச்சு அனுமதித்தும் நிவாரணம் கிடைக்கவில்லை

[யாழ்ப்பாணம்]

அரசாங்கச் சேவையில் சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாகப் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற, விலகிய ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு, பொது நிர்வாக, உள்நாட்டு அமைச்சு அறிவித்திருந்தும், சில அரச திணைக்களங்கள் இதுவரை நிவாரணம் வழங்காது அசிரத்தையாக உள்ளன எனச் சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாக ஓய்வுபெற்ற ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை இல. 37/91, 23-8-91ன் பிரகாரம் பாதிக்கப்பட்ட ஊழியாகள், தாம் கடமை பார்த்த திணைக்களங்களுக்கு ஏற்கனவே விண்ணப்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. [சு]

## சரணடைய உத்தரவு

(சென்னை)

விடுதலைப்புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர் எனக்கருதப்பட்டவரும் தற்போது தலைமறைவு வாழ்க்கைநடத்தி வருபவருமான குமரன் என்பவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டதோடு ஜூலை 7ம் திகதிக்கு முன் சென்னையில் உள்ள சிறப்பு நீதிமன்றின் முன் சரணடையுமாறுசிறப்பு நீதிபதி எஸ். என். சித்திக் உத்தரவிட்டுள்ளார்,

தமிழக காவல்துறை செய்து கொண்ட மனுவையடுத்தே நீதிபதி மேற்கண்ட உத்தரவை விடுத்துள்ளார். (க)

## உதைபந்தாட்ட போட்டி

(பண்டத்தரிப்பு)

மாதகல் சென் தோமஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி கடந்த புதன் கிழமை மாதகலில் உள்ள சழக விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த முப்பது பிரபல விளையாட்டுக் கழகங்கள் மோதுகின்றன. இம்மாதம் 26ம் திகதியன்று இறுதிப்போட்டி நடைபெறும் வெற்றியீட்டும் சழகங்களுக்கு வெற்றிக்கேடயங்களும், பணபரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (72)

## 'ராவய' மீது சிறப்புரிமை மீறல்

[கொழும்பு].

'ராவய' என்ற சிங்களப் பத்திரிகையில் வெளிவந்த செய்தி தொடர்பாக நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைமீறல் பிரச்னை எழுப்பப்பட்டது.

இச்செய்தி தொடர்பாக தெங்கு தொழிற்துறைஅமைச்சர் இந்திரதாச ஹெற்றியாராச்சி புகார் தெரிவித்துள்ளார்.

# பட்டப் பகலில் வீடு தீப்பற்றியது

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டையில் பட்டப்பகல் வேளையில் வீடொன்றின் மீது திடீரென தீப்பற்றிக் கொண்டதனுல் வீட்டிலுள்ள அனைத்து உடமைகளும் எரிந்து நாசமானது.

இச்சம்பவம் பற்றி தெரிவிக்கையில், கடந்த புதனகிழமை மாலை 3 45 மணியளவில் ஆனைக்கோட்டை மூள்ளி கிராமத்தில் ரவிச்சந்திரன் வீதியில் வசிக்கும் துரைராசா இராசாத்தி என்பவரின் வீடு யாருமில்லாதவேளை திடீரென தீப்பற்றி எரியத் தொடங்கியது.

இவ்வேளை அயலிலுள்ளவர்களின் உதவியுடன் வீதியால் சென்றவர்களும்தீயை அணைப்பதற்கு பல பிரயத்தனம் எடுத்தும் தீயை அணைக்க முடியாது வீடு முற்றாக எரிந்து சாம்பரானது. இத்துடன் வீட்டில் இருந்த துவிச்சக்கர வண்டி 1500 ரூபா ரொக்கப் பணம் எள்ளுமூடைகள், உடுபுடவைகள் உட்பட சுமார் 40,000 ரூபா பெறுமதியான உடமைகள் தீக்கிரையாகின. [71]

## இராசிபலன்

13-06-1992 சனிக்கிழமை (தமிழுக்கு வைகாசி 31)

திரயோதசி மு. ப. 10-07 வரை, விசாகம் காலை 7-50 வரை, சித்தயோகம் இராகு காலம் காலை 8-53 முதல் 10-33 வரை, சுபநேரம் பகல் 2-53 முதல் 4-23 வரை.

மேடம்- மனக்குளப்பம், தொழில் பாதிப்பு, வெறுப்பு.

இடபம்- குடும்ப மகிழ்ச்சி, வெளியூர் செய்தி, பணவரவு.

மிதுனம்- கல்வியால் புகழ், இனசனவருகை, காரியசித்தி

கடகம்- அசாத்திய துணிவு, பகைவர் துன்பம், யோசனை.

சிங்கம்- தொழில் குளப்பம், அநாகரிக செயல், அகால போஷனம்.

கன்னி- புதிய முயற்சி, குடும்பசுகம், நண்பர் உதவி.

துலாம்- குடும்ப சச்சரவு, வேண்டாத உறவு, அலைச்சல்.

விருச்சிகம்- விதண்டாவாதம், பெற்ருேர் உதவி, பயணம்.

தனுசு- வயிற்றுவலி, தொழில் நஷ்டம், தெய்வசிந்தனை.

மகரம்- புதியஸ்தானம், விடாமுயற்சி விருந்து வைபவம்.

கும்பம்- தியாக உணர்வு, நோய் தணியும், பாராட்டு

மீனம்- உறவினர் துன்பம், வாக்குகலகம், வைத்திய செலவு.

—ஜோஸ்யர்

## ஒய்வூதிய பணிக்கொடை

(மானிப்பாய்]

ஓய்வூதியத் திணைக்களத்திலிருந்து 250 பேரின் ஓய்வூதியப் பணிக்கொடைகள் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

இவற்றில் விதவைகள் அனதைகள் ஓய்வூதியம் பெறுபவர்களின் 150 பணிக்கொடைகளும் சிவில் ஓய்வூதியம் பெறுபவர்களின் 100 பணிக்கொடைகளும் வந்து சேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## இன்றைய போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுலுள்ள விளையாட்டுக்கழகங்களிடையே வலைபந்தாட்டப்போட்டியும், எல்லே விளையாட்டுப்போட்டியும் இன்று நடைபெறவுள்ளது.

எல்லே விளையாட்டுப் போட்டி இன்று காலைபுத்தூர் வினஸ் விளையாட்டுக்கழக மைதானத்திலும் வலைபந்தாட்டப்போட்டி இன்று மாலை நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

உதைபந்தாட்டப் போட்டிகள் 15ம் திகதி ஆரம்பமாகுமென்று, இப்பகுதி விளையாட்டுஉத்தியோகஸ்தர் திரு. வீ. வைரமுத்து தெரிவித்தார். (வி)

# ப. நோ. கூ. சங்கங்கள்! நட்டத்தில் இயங்குகின்றன?

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுச் சங்கங்களை அத்தியாவசியப் பொருட்கள் விற்கும் ஏக விநியோகஸ்தர்களாக நியமிக்குமாறு யாழ். கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலக புனர்வாழ்வுப் பிரிவு கூட்டுறவுச்சங்கங்கள் அல்லாத நிறுவனங்களால் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்க நடவடிக்கை எடுத்ததினுல் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது, (+)

## உணவு விநியோகம்

(மானிப்பாய்)

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தினர் 7வது தொடரிலக்க உணவு முத்திரைகளுக்கு பொருட்களை வழங்கி வருகின்றனர்.

இப்பொருட்கள் 1வது 2வது புள்ளிகளுக்கே தறபோது விநியோகிக்கப்படுகிறது. (71)

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் ஆண்டுப்பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வைத்தியசாலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. உறுப்பினர்கள் அனைவரும் சமூகந்தருமாறு வேண்டப்படுகிருர்கள்.

# அலம்பில் - குமுழமுனை மக்கள் வெளியேற்றம்

(யாழ்க்பாணம்)

அலம்பில்-குமுழமுனைப் பகுதியை நோக்கி படையினர் ஆரம்பித்த தாக்குதல் நடவடிக்கைகளையடுத்து பெரும் தொகையான மக்கள் அப்பகுதிகளை விட்டு வெளியேறி வருகிருர்கள்.

மீனவர்கள், விவசாயிகள் தமது சேகரிப்பிலிருந்த உப உணவுப் பொருட்கள் சிறுக தங்கள் வீடுகளில் உள்ள அகப்பட்ட பொருள்களை எடுத்துக் கொண்டு பிறஇடங்களை நோக்கிச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

படையினர் முகாம்களிலிருந்து ஷெல் தாக்குதல், கடற்பரப்பிலிருந்து ஓயாத பீரங்கித் தாக்குதல்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவதனுல் குமுழமுனைப் பகுதியில் வந்து குண்டுகள் வீழ்ந்துவெடிக்கின்றன. இதனைத் தொடர்ந்து மக்கள் வெளியேறி வருகின்றனர். (56)

## மாணவன் பலி

(பண்டத்தரிப்பு)

கடந்த வியாழக்கிழமை மாலை 5-45 மணியளவில் மாதகலில் இரு பொம்பர் விமானங்கள் நடாத்திய 'ரொக்கற்' தாக்குதலில் 11வயது மாணவர் ஒருவர் உடல்சிதறி பலியானுர்.

மாதகல் புனித தோமையப்பர் பாடசாலையில் கற்கும் சாள்ஸ் அன்ரன் என்ற மாணவரே இவ்வாறு பலியானவாவர். அவரின் வீடும் பலத்த சேதமடைந்தது. (72)

# சைக்கிள் கடை உடைக்கப்பட்டு கொள்ளை

[யாழ்ப்பாணம்]

கோயிலாக்கண்டி - கேரதீவு வீதியில், சைக்கிள் திருத்தும் கடை ஒன்று, பூட்டு உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான சைக்கிள் திருத்தும் உபகரணங்களும், உதிரிப் பாகங்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியிலுள்ள எஸ். கிருஷ்ணபிள்ளை என்பவருக்குச் சொந்தமான சைக்கிள் திருத்தும்கடையே நேற்றுமுன் தினம் இரவு உடைக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டது.

இத்திருட்டுத் தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதேசப் பொறுப்பாளரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் கடத்தல் வெளிநாட்டவர் சிக்கினர்

(கொழும்பு)

20 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு கிலோ நிறையுள்ள ஹரோயின் போதைப் பொருளை கடத்தி வந்தவெளிநாட்டவர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பிடிபட்டார்.

இந்த போதைப்பொருளை சாதுரியமாக பழங்கள் அடைத்துக் கொண்டு வரப்படும் தகரத்தில் அடைத்து, இவர் களவாக கொண்டு வந்தபோது, அங்கு கடமையில் இருந்த சுங்கப்பகுதியினரால் பிடிக்கப்பட்டார்.

# இந்திய, மாலைதீவு சிறையில் 70 இலங்கையர்

(கொழும்பு)

இந்தியா, மாலைதீவு ஆகிய நாடுகளில் அறுபது முதல் எழுபது வரையிலான மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை மீட்டு இலங்கைக்கு கொண்டுவர முயற்சி எடுக்குமாறு வெளிநாட்டு அமைச்சை ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# தமிழர் விடயத்தில் இந்தியா பார்வையாளனல்ல!

தூதுவர் ஜா கூறுகிறார்

(கொழும்பு)

''தமிழ் மக்களது நலனில் இந்தியா அக்கறை கொண்டுள்ளது. இந்தியா வாளாவிருக்கும் பார்வையாளன் அல்ல''.

ஹோட்டல் இன்ரகொன்ரினென்ரலில் நடைபெற்ற ரோட்டறி மாநாட்டில் பங்குபற்றிய இந்திய தூதுவர் என். என். ஜா உரையாற்றும் போது இவ்வாறு கூறினார்.

புலிகள் மீதான தடை குறித்து விளக்கமளிக்கும் போதே திரு. ஜா இவ்வாறு கூறினார். (கே)

# காலநிலை சீரானதும் அகதிகள் திரும்புவர்

(சென்னை)

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை தமிழ் அகதிகளில் சுமார் 6 ஆயிரம் பேர் தமது தாயகத்திற்கு திரும்பிச் செல்வதற்கு தயாராகவுள்ளதாகவும், அங்கு தற்போது காலநிலை சீரற்றுள்ளதால் அவர்கள் பயணம் தடைப்பட்டுள்ளது எனவும் தமிழக சிறப்பு ஆணையாளர் சி. எஸ். ராம்தாஸ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இவ்வாண்டு ஜனவரிமுதல் இதுவரை 6,345 குடும்பங்களை சேர்ந்த 23,126 இலங்கை தமிழ் அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் இவர்களுள் 18,755 பேர் கப்பல் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் விமான மூலம் அனுப்பப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# 25 நாட்கள் வேலை அல்லது சம்பளம்

(கொழும்பு)

அரசாங்கம் அறிவித்தபடி தோட்டத் தொழிலாளர்களுக்கு 25 நாட்கள் வேலை வழங்கவேண்டும். இல்லையேல் அதற்குரிய சம்பளம் வழங்க வேண்டுமென கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

25 நாட்களுக்கு குறைவாக வேலைசெய்திருந்தால் மேலதிகமாக தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் 10 மாதங்களுக்குள் அறவிடவேண்டும் ஒரே மாதத்தில் இதனை அறவிட முடியாது.

இதனை தோட்ட நிர்வாகங்கள் நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் அரச கொள்கையில் மாற்றமெதுவுமில்லையெனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார். (கே)

# 25,000மக்கள் அகதிகளாகத் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்குபகுதிகளில் அனேகமானஇடங்களில்மேற்கொள்ளப்பட்ட மும்முனைத் தாக்குதலால் சுமார் 25,000 மக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறி வேறுஇடங்களை நோக்கி சென்றபடி இருந்தனர்.

வலிமேற்கு, வலிதெற்கு பகுதியை நோக்கியே இவர்கள் சென்றபடி இருந்தனர். ஆலயங்கள், பாடசாலைகள் வேறு கட்டிடங்கள் மற்றும் வீதியோரங்களில் இவர்கள் தங்கியிருக்கின்றனர்.

தெல்லிப்பளை, மல்லாகம், இளவாலை, சேந்தான்குளம் மற்றும் இவற்றை அண்டிய பகுதி மககளே வீடுகளைவிட்டு வெளியேறியவர்களாவர். (56)

## வவுனியாவில்

# தொண்டர் ஆசிரியருக்கு நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பிரதேசங்களில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு வவுனியாவில் நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது.

இப்பிரதேசங்களில் கடமையாற்றிவரும் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கு வவுனியாவில் நேர்முகப்பரீட்சை நடத்துமாறு கல்வி ராஜாங்க அமைச்சர் ராஜ மனோகரி புலேந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

ஏனைய மாவட்டங்களில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுவரும் இவ்வேளையில் வடபகுதியில் மேற்கொள்ளப்படும் ராணுவ நடவடிக்கைகள் காரணமாக நிரந்தர நியமனங்கள் இப்பகுதியில் வழங்கப்படவில்லை.

# போர்க்கால குண்டு வீச்சே புற்றுநோய்க்கு காரணம்

## - பேராசிரியர் கணேசலிங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலும் வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் அதிகரித்து வரும் புற்றுநோய்க்கு போர்க்காலங்களில் வீசப்படும் குண்டுகளில் இருந்து வெளிப்படும் இரசாயன சேர்க்கைகள் தான் காரணமாகும் ''

இவ்வாறு யாழ். பல்கலைக் கழகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ''சூழல் மாசடைதல், பேணுதல்'' பற்றிய கருத்தரங்கில் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் குறிப்பிட்டார்.

அவர்மேலும் கூறியதாவது: குண்டுகளால மனிதன் சூழல் மாசடைகின்றதுஎன்பதைமுதலாவது உலக மகாயுத்தம் உலகிற்கு எடுத்துக்காட்டியது. மக்கள் பயங்கர நோய்களுக்கு உட்பட்டதோடு கண்குருடு போன்ற நோய்களும் ஏற்பட்டன.

மலேரியா, வைரஸ்போன்ற கிருமிகளை போர்க்காலங்களில் எதிரிகளில் சுலபமாக பரவ விட்டால் அதனால் ஏற்படும் விளைவு ஒரு ஹெலி, பொம்பரினால் ஏற்படும் சேதத்திற்கு ஒப்பிடலாம்.

வீடுகளுக்கு மேல் குண்டு போட்டு எரியும்போது பல பொருட்கள் எரிவதனால் அதில் தங்கியுள்ள இரசாயன வாயுக்கள் காற்றுடன கலக்கின்றன.

அதுமட்டுமல்ல குண்டுகளின் சத்தத்தினாலும் காது செவிடாகி போவதுஅதிர்ச்சிபோன்றவற்றில் மக்கள் பாதிக்கப் படுகிறார்கள்'' என்றார். (சு)

# அதிபர் புஷ்சை பேசவிடாது பனமாவில் பெரும் குழப்பம்

## கூட்டமும் ரத்தானது

(லண்டன்)

பனமாவில் மக்கள் மத்தியில் உரையாற்ற முயன்ற அமெரிக்க அதிபர் திரு. புஷ் அங்கு மக்கள் மேற்கொண்ட பெரும் ஆர்ப்பாட்டத்தினால் உரையாற்றமுடியாது திக்குமுக்காட வேண்டிய தொரு நிலைமை ஏற்பட்டது.

மேடையிலிருந்த திரு. புஷ்ஷையும், பனமா அதிபர் திரு.என்டாராவையும் பொலிஸார் பலத்த பாதுகாப்புடன் உடனடியாகவே அழைத்துச் சென்றுள்ளனர். கூட்டமும் ரத்தானது.

திரு.புஷ் றியோடிஜெனீரோ செல்லும் வழியில் பனமாவில் இறங்கி, 1989ல் ஜெனரல் நொறியேகாவைப் பதவியில் இருந்து அகற்றிய அமெரிக்கப் படையெடுப்பை பாராட்டிப் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேடைக்கு அதிபர் புஷ் வருகை தந்ததும், அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் கூச்சல், குழப்பம் செய்ததை அடுத்து, கூட்டத்தினரைக் கட்டுப்படுத்தப் பொலிஸார் கண்ணீர்ப்புகை, தடியடிப்பிரயோகம் செய்தனர். (தி)

# புதிதாக 31 பேர் தொழு நோயால் பாதிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் புதிதாக 31 பேர் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருப்பதாகச் சுகாதார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அந்நோயாளர்களாகளில் 11 பேர் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் பரிபாலன எல்லைக்குட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. [154]

# கடை உடைத்து பொருட்கள் கொள்ளை

(ஆனைப்பந்தி)

கொக்குவில் பகுதியில் உள்ள கடையொன்று கடந்த வாரம் உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

குமரப்பா லேனில் முருகன் ஆலயத்திற்கு அருகில் உள்ள இக்கடையை நள்ளிரவில் உடைத்து உட்புகுந்த திருடர்கள் அதனுள் இருந்த பெரும்பாலான பொருட்களை களவாடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தமிழீழ காவல் துறையினரிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது. (101)

# உடுகம்பொலவை பிடிக்க பகிரங்க பிடிவிறாந்து

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம் பொலவை கைது செய்ய பகிரங்க பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உடுகம் பொலவின் வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, அவரை கைது செய்வதற்கு நீதபதி பகிரங்க பிடிவிறாந்தை பிறப்பித்தார்.

கடந்த ஒரு மாதமாக இவர் தலைமறைவாகி இருப்பதும் தெரிந்ததே. (கே)

# விவசாயிகள் காப்புறுதி திட்டம்

(யாழ்ப்பாணம்)

விவசாயிகளின் காப்புறுதித் திட்டத்தை மீண்டும் செயல்படுத்துமாறு யாழ். அரச அதிபர் திரு, கா. மாணிக்கவாசகர் விவசாய அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த இருவருடங்களுக்கு மேலாக, செயல்படாமல் போன, விவசாயிகள் காப்புறுதித்திட்டத்தை மீண்டும் அமுல்படுத்தும்படியும், காப்புறுதி செய்து கொண்ட விவசாயிகள் மட்டுமே வங்கிகளில் கடன்பெற முடியும், என்பதையும் யாழ். அரச அதிபர் தமது வேண்டுகோளில் சுட்டிக்காட்டியுள்ளார். (கே)

# வவுனியா ஊடாக பயணம் தொடர்கிறது

(வவுனியா)

வடபகுதியில் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டிருந்த போதிலும், வடபகுதியிலிருந்து பயணிகள் தாண்டிக்குளம் ஊடாக வவுனியா வந்தனர்.

வவுனியாவிலிருந்தும் பயணிகள் வடபகுதிசெல்ல அனுமதிக்கப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் வவுனியாஊடாக பயணம் செய்வோர் தொகை மிகக் குறைவாகவே இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கே)

# பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கிராம அலுவலர்கள்சேவையின் 11ம் தரத்துக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப்பரீட்சை இன்று 13ம் திகதி நடைபெறும் ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு ஆகிய பகுதிகளிலிருந்து விண்ணப்பித்த இடம்பெயர்ந்த பரீட்சார்த்திகளுக்கு விசேட பரீட்சை நிலையங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

# நாள்தொறும் புகழ்வேன்

பல்லவி

நாள்தொறும் பணிவேனென் நாயகனே—உன்னை
நாள்தொறும் புகழ்வேனென் விநாயகனே—கஜனே
(நாள்......)

அனுபல்லவி

இலந்தைக் குளத்தலத்தில் நிறைந்திருப்பாய்—அன்புக்
குழந்தைக் குணத்திலருள் பொழிந்திருப்பாய்—ஐயா
(நாள்......)

சரணம்

பணிந்துன்தன் பதிநாடல் இன்பமையா—சிரம்
குனிந்துன்தன் புகழ்பாடல் இன்பமையா—நீறு
அணிந்துன்தன் பெயர்கூறல் இன்பமையா—மனம்
கனிந்துன்தன் அருள்கூடல் இன்பமையா—கணேசா!
(நாள்......)

— முருகு —

(இன்று கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ விநாயகமூர்த்திப் பிள்ளையார் ஆலயத்தில் தேர்த் திருவிழா.)

# யாழ். மாவட்டத்தில் 6000 விதவைகள்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில், போர் நடவடிக்கைகளினால் இதுவரை ஆறாயிரம் பேர் கணவன்மார்களை இழந்து விதவைகளாகியுள்ளனர். இவர்களின் நல்வாழ்வுக்காக தென் இந்திய திருச்சபை முடிந்தளவு உதவிகளைச் செய்துவருகின்றது.

இத்தகவலை நேற்றுக்காலை தென் இந்திய திருச்சபையின் யாழ் பேராலயத்தில் சுயதொழில் முயற்சிகளில் பயிற்சிகளை வழங்கிய எழுபத்தைந்து விதவைகளுக்கு சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட தையல் மெஷின்கள், கோழிக்குஞ்சுகள், பசுமாடுகள் போன்றவற்றை வழங்கும் வைபவத்தில் தென் இந்திய திருச்சபையின் சுயதொழில் முயற்சிக்கான திட்ட அமைப்பாளர் திரு. ரி. இராஜரத்தினம் தெரிவித்தார்.

இவ்வைபவத்திற்கு தென் இந்திய திருச்சபைஅருட்சகோதரர் மு ஜெயக்குமார்தலைமை தாங்கினார். சான்றிதழ்களையும் அவர்களுக்கான சுயதொழில் உபகரணங்களையும் திருமதி ஜெயக்குமார் வழங்கினார்.

திரு. இராஜசிங்கம் தொடர்ந்து பேசுகையில், ''இப்போது உபகரணங்கள் வழங்கப்படும் விதவைகள் தமது நிறுவனங்களில் ஆறு மாதகால இலவச பயிற்சி நெறியைப் பெற்றவர்களாவர். இவர்களுக்கான செலவுகளை கனேடிய கிறிஸ்தவ நிறுவனம் எமக்கு வழங்கியுள்ளது.

இதுவரை நாம் பன்னிரண்டு லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை விதைவைகளுக்கு வழங்குயுள்ளோம் என்றார்.

இரண்டாம் கட்டமாக எழுபத்தைந்து விதவைகள் விரைவில் தையல், விவசாயம், கால்நடை வளர்ப்பு, தட்டெழுத்து ஆகிய துறைகளில் பயிற்சி பெற தெரிவு செய்யப்படுவார்கள் என்றார். (எஸ்)

## சன்மானம் பகிர்ந்தளிப்பு

(சென்னை)

ராஜீவ் கொலையில் சம்பந்தபட்டதாகக் கூறப்படும் ஒற்றைக்கண் சிவராசன், சுபா ஆகியோரை பிடிப்பதற்கு உதவி செய்ததாக 21 பேருக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக சிறப்பு புலனாய்வுத் துறை அறிவித்துள்ளது.

இதன்படி 8 பேருக்கு தலா 90,000 ரூபா வீதமும் ஏனையோருக்கு மிகுதிப் பணமும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இதேவேளை இந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டதாக தமிழக பொலிசாருக்கு 3 லட்சம் ரூபாவும் கர்நாடகப் பொலிசாருக்கு 2 லட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. [சி]

## ஹெலி சுட்டு மாணவன் காயம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப் பகுதியில் வட்டமிட்ட ஹெலிகொப்டர் ஒன்று நேற்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் மாணவர் ஒருவர் படுகாயமடைந்தார்.

சுன்னுகம் பகுதியில் நின்ற போது துப்பாக்கிச் சன்னம் பட்டு காயப்பட்டவரான தெல்லிப்பழையைச் சேர்ந்த கனகரட்ணம் பாலச்சந்திரன் [வயது 14] என்ற மாணவர் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் [56]

## ராஜீவ் கொலை: அறிக்கை கையளிப்பு

(சென்னை)

ராஜீவ் கொலை தொடர்பான பாதுகாப்பு குறைபாடுகள் பற்றி விசாரணை நடாத்தி வரும் வர்மா கமிஷனின் அறிக்கை உள்துறை அமைச்சர் திரு. சவானிடம் கையளிக்கப்படவுள்ளது.

தற்போது வர்மா கமிஷன் இது குறித்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதும் தெரிந்ததே.

### சமாதானத்தீர்வுக்கு

1ம-பக்கத் தொடர்ச்சி;

தீர்வே இப்பிரச்னைக்கு அவசியமென புலிகள் வலியுறுத்துவதும் அந்த சந்தர்ப்பங்கள் பலவற்றை அரசு நழுவவிட்டு வருவதும் தெரிந்ததே. (சி)

### தெரிவுக்குழுமுன்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

குழுவினருடன் புலிகள் பேசுவதையே அரசும் விரும்புவதாகவும் அமைச்சர் அமரதுங்க தெரிவித்தார். (சி)

# கொக்கட்டிச்சோலை படுகொலைகள்: ஒரு வருடமாகியும் இதுவரை நஷ்டஈடு வழங்கப்படவில்லை

[கொழும்பு]

கொக்கட்டிச்சோலையில் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளது.

இச்சம்பவத்தின்மூலம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்டஈடு எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என்று ஜனதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தை விசாரிக்க ஜனதிபதி ஆணைக்குழு ஆறு மாதங்களின்பின் இடைக்கால அறிக்கை சமர்ப்பித்தும், இதன் முழு அறிக்கை சமர்ப்பித்து இரண்டரை மாதமாகியும் அதில் பரிந்துரைக்கப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்படாதது பற்றி பொதுமக்கள் ஜனதிபதிக்கு முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது [சு]

## உலக நேரம் அதிகரிப்பு

(கொழும்பு)

பூமியின் சுழற்சிக்கு இசைவாக உலக நேரம் இம்மாதம் 30-ம் திகதி திருத்தப்படவுள்ளது. இதன்படி ஒரு விநாடியால் உலக நேரம் அதிகரிக்கப்படும்.

1972 ம் ஆம் ஆண்டு முதல் இந்த லீப் விநாடிகள் உலக நேரத்துடன் 17 தடவைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. [சே]

## 200 உடற்பயிற்சி ஆசிரியர்கள் சேவையில் சேர்க்கப்படுவர்

[கொழும்பு]

கல்விச் சேவைகள் சபை 250 விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி உதவி ஆசிரியர்களை சேவையில் ஈடுபடுத்தவுள்ளது.

இந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இப்போது கோரப்பட்டுள்ளன.

சிங்கள, தமிழ் பாடசாலைகளுக்கு இந்தப் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்கள், கல்விப் பொதுத்தராதர சாதாரணதரபரீட்சையில் சித்தியடைந்தவர்களும் அதனிலும் கூடிய தராதரமுடையவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

செய்முறைப் பரீட்சையின் பின்னர் தேர்வுகள் மேற்கொள்ளப்படும். ஆசிரியர்கள் பற்றுக்குறையுள்ள மாவட்டங்களில் வசிப்பவர்களின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இவ்வாறு தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு 3 மாதகால பயிற்சி அளிக்கப்படும். எழுத்துப் பரீட்சை செய்முறைப் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்தவர்களுக்கும் நியமனம் வழங்கப்படும்.

பத்தரமுல்ல, இசுருபாயவிலுள்ள கல்விச் சேவைகள் சபைக்கு இம் மாதம் 26ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்படல் வேண்டும்.

இதன் முழுவிபரங்களையும் இம்மாதம் 5ம் திகதி வெளியான வர்த்தமானியில் அறிந்து கொள்ளலாம். [கே]

## மற்றொரு கப்பல்

(கொழும்பு)

அரிசி, சீனி, தபால் பொதிகளுடன் மிக விரைவில் கொழும்பிலிருந்து கப்பல் ஒன்று பருத்தித்துறைக்கு புறப்படவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## கிராமசேவை அலுவலர் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

கிராமசேவை அலுவலர் பரீட்சைக்கான வினுத்தாள்கள் நேற்று பிற்பகல் 4 மணி வரை கல்வித் திணைக்களத்துக்கு வந்துசேராதபடியால், வினுத்தாள்கள் இன்று சனிக்கிழமை காலையில் வந்துசேருமாயின் பரீட்சை தாமதித்தே ஆரம்பிக்கும் எனவே பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபங்களில் தங்கி இருக்கும்படி கேட்கப்படுகின்றனர் என கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

### நோக்கம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியை மேலும் விஸ்தரிப்பதே படையினரின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

விமானப்படை, கடற்படை, கவசப்படைப்பிரிவு, தரைப்படைகள் இத்தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாம். [சி]

### ஒரே குடும்பத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தோர் விபரம் வருமாறு;-

சிவபாதவிருதையர் சிவயோகீஸ்வர சர்மா [31-வயது, விழிசிட்டி, தெல்லிப்பழை], திருமதி குணஜானகி சிவயோகீஸ்வர சர்மா [25 வயது, விழிசிட்டி, தெல்லிப்பழை], சிவபாதவிருதயமூர்த்திக்குருக்கள் [33 வயது, விழிசிட்டி, தெல்லிப்பழை,]

இவர்கள் மூவரும் தமது வீட்டிற்குச் சென்று அதனைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கையில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் வீட்டில் வீழ்ந்து வெடித்தபோது படுகாயமுற்றனர். (56)

## 30 க்கும் அதிகமான படையினர் பலி

[யாழ்ப்பாணம்]

வலிகாமம் வடபகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படையினருக்குமிடையில் நடைபெற்றுவரும் மோதலில் 30 ற்கும் மேற்பட்ட படையினர் பலியானதாகவும் 100 க்கும் அதிகமான படையினர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க]

### வீரச்சாவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டனர்.

கருணகரன் அல்லது நேசன் என அழைக்கப்படும் தலைவர் மகேசன் [கொக்குவில் பொற்பதி வீதி], குமுழவேந்தன் அல்லது நிருபன் (முருகேசன் உஷாந்தன்-''கோப்பாய்'' வடக்கு, கண்ணகை அம்மன் கோவிலடி] ஆகியோர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

வீரச்சாவடைந்த போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். [க]

### ஸ்ரீலங்கா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீட்டுவிடலாம் என்று இலங்கை இராணுவம் புலிகள் மீது இந்த பாரிய தாக்குதல்களை தொடுத்துள்ளது.

இராணுவம் தான் கைப்பற்றிய சிறிய இடங்களைத் தொடர்ந்து பாதுகாக்க முடியுமா என்ற அச்சமும் அவர்களிடம் உண்டு. கைப்பற்றிய இடங்களை பாதுகாப்பதற்காக ஒரே இடத்தில் கூடி நின்ருலும், புலிகளின் சுற்றிவளைப்பில் தாம் அகப்பட்டு முற்ருக அழிந்துவிடுவோம் என்ற பயத்தால் செறிந்து நிலைகொள்ளவே இராணுவத்தினர் முயற்சிக்கின்ருர்கள்.

யாழ். கோட்டையில் புலிகளின் சுற்றிவளைப்பில் இலங்கை இராணுவம் பட்ட வேதனைகளை அவ்வளவு இலகுவில் மறந்திருக்க முடியாது.

வவுனியாவில் ஒருசில இடங்களை இராணுவம் தன் கட்டுப்பாட்டில் பெரும் சிரமத்தின் மத்தியில் வைத்திருக்கின்றது.

வடபகுதியிலும் தன் ஆட்சி நடைபெற்று வருகிறது என்பதை உலகநாடுகளுக்கு காட்டும் முகமாகவே ஜனதிபதி பிரேமதாசா நடமாடும் செயலகத்தை வவுனியாவில் நடாத்தினர். அது ஒரு கண்துடைப்பு வேலையென்பது உலகநாடுகளுக்கு நன்கு தெரியும்.

இதேபோன்று தான் 2 மாதங்களுக்குள் வடக்கு – கிழக்கு மாகாணங்களின் பிரச்னைக்கு முடிவு கட்டிவிடுவோம், என இலங்கைப் பிரதமர் அண்மையில் கூறியுள்ளார். இது சாத்தியப்படக் கூடியதல்ல

இவை எல்லாவற்றுக்கும் முக்கிய காரணம் இந்தியாவில் விடுதலைப் புலிகளை தடை செய்தது தான் புலிகள் முன்னர் இலங்கையுடன் தான்போர் நடாத்தினர். தற்போது இந்தியாவும் – இலங்கையும் சேர்ந்து புலிகளுடன் போர் தொடுத்துள்ளன.

ஆனல் இப்போர் உடன் முடியக்கூடியதன்று. இது ஒரு நீண்டகாலப் போராகத்தான் இருக்கும்'', என்று இந்திய வானெலி கன் கண்ணேட்டத்தில் தெரிவித்தது. (வி)

### நயினதீவில்

(1-ம பக்கத் தொடர்ச்சி]

தகர்களும் மோசமாக தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

கடந்தவாரம் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது; நயினதீவு உட்பட தீவகப் பகுதியில் உள்ள மக்களுக்கு கொழும்பிலிருந்து உணவுப்பொருட்கள் கொள்வனவு செய்துவருவதற்காக சில வர்த்தகர்கள் ஏற்பாடுகளைச் செய்துவிட்டு சிறிலங்கா கடற்படையினரிடம் அதற்கான அனுமதி பெறச் சென்றனராம்.

இவர்களிடம் கடற்படையினர் மறுநாள் அதிகாலை வருமாறு கூறியதை அடுத்து அடுத்தநாள் அதிகாலை 2 மணியளவில் பணத்துடன் அவ் வர்த்தகர்கள் நயினதீவு சிறிலங்கா கடற்படை முகாமை நோக்கி சென்றுகொண்டிருந்த வேளையில் இனந்தெரியாத சிலர் இவர்களை வழிமறித்து வாளினல் வெட்டியும், பொல்லினல் அடித்தும் கொடூரமாக தாக்கிவிட்டு அவர்களிடமிருந்த 8 லட்சரூபா பணத்தையும் சூறையாடிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

தாக்குதலுக்கிலக்கானவர்களில் நயினதீவைச் சேர்ந்த மணிவாசகம் என்ற வர்த்தகர் உட்பட மூவர் பலத்த காயங்களுடன் காரைநகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [101]

### தாக்குதல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கைகளை மேலும் தொடரும் எனவும் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

### பன்னலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் ஷெல்தாக்குதலில்6பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

பன்னலையில் 3 பொதுமக்களும். பண்டத்தரிப்பு, இளவாலையில் 3 பொதுமக்களும் காயமடைந்துள்ளனர்.

### இராணுவம்

[1-ம பக்கத் தொடர்ச்சி]

களப்பு போரதீவில் வைத்து இலங்கை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரோடு பழுகாமத்தைச் சேர்ந்த ஆனந்தராசா (20-வயது), யோகநாதன் [22-வயது) ஆகிய இருவரும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிய வருகிறது. இச்சம்பவம் கடந்த 9-ம் திகதி நடைபெற்றது. (சு)

### புலிகள் தடை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொடி காட்டப்படும் என பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ் மற்றும் முன்னுள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் ஆகியோர் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

சென்னையில் நேற்று பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர்கள்மேற்படி தகவலை வெளியிட்டனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்: விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்ததன் மூலம் மத்தியஸ்த தகுதியை இந்தியா இழந்துவிட்டது என்றன.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 66-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூன் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under licence Number B/10336/81